Asia
Floor
Wage
Alliance

@asia_floorwage
asia_floor_wage_alliance
AsiaFloorWage
asiafloorwage@gmail.com

# கோவிட்-19 மனிதாபிமான நெருக்கடியில் பன்னாட்டு வர்த்தக நிறுவனங்களின் பொறுப்புணர்வு: ஆயத்த ஆடைத் தொழிற்சாலை பணியாளர்களுக்கு நிவாரண பங்களிப்பு

ஏப்ரல் 2020

## I. ஆயத்த ஆடை தொழிற்சாலை பணியாளர்கள் எதிர்கொண்டுள்ள கோவிட்-19 நெருக்கடி

கோவிட்-19 தொற்று உலகளாவியதாகவும் வேகமாக பரவுவதாகவும் இருப்பதன் காரணமாக, உலகின் பெரும்பாலான பகுதிகளுக்கு ஆடைகளை உற்பத்தி செய்யும் ஆசியாவிலுள்ள ஆயத்த ஆடை தொழிற்சாலை பணியாளர்கள் நிர்கதியான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். சாதாரண நிலைமகளிலேயே பல இடர்பாடுகளினாலும் வருமையினாலும் குறைந்தபட்ச வாழ்க்கைத்தரத்துடன் வாழும் இந்த பணியாளர்கள் இந்த மாபெரும் பிரச்சனையின் கொடூரத்தைத் தாங்கிக் கொள்வதற்கு குறைந்தபட்ச வாய்ப்புகளையே கொண்டுள்ளனர். தாம் வறுமையில் வாழ்கின்றபோதிலும், வருடம் முழுவதும் உலகளாவிய ரீதியில் இலாபகரமாக இயங்கக்கூடிய ஆயத்த ஆடை தொழிற்துறைக்காக உற்பத்தி செய்யும் பணியில் ஈடுபட்டுள்ள இந்த பணியாளர்களின் துயரத்தில் பங்கெடுப்பது தார்மீக கடமையாகும்.

இப்பணியாளர்கள் எதிர்கொள்ளும் நெருக்கடியின் அளவை புரிந்து கொள்வதற்காக ஆசியாவில் ஆயத்த ஆடை உற்பத்தி செய்யும் நாடுகளிலுள்ள தொழிற்சங்கங்களுடன் ஆசியா புளோர் வேஜ் அலையன்ஸ் பணியாற்றி வருகிறது. பணியாளர்களும் அவர்களது குடும்பங்களும் பட்டிணியுடனும், இருப்பிடமின்றியும் பல்வேறு உடல் உபாதைகளுடன் சுகாதார நலன்களைப் பெற முடியாதவர்களாகவும் இருப்பதை நாம் அறிவோம். இந்த இக்கட்டான நிலையில் பெரிதும் பாதிக்கப்பட்டது எந்தவொரு ஆதரவுமில்லாத புலம்பெயர் பணியாளர்களே அதிகமானோர் ஆவர்.

பணியாளர்களின் தேவைகள் பலதரப்பட்ட தன்மையுடையதுடன், அவற்றிற்கு குறுகிய மற்றும் நீண்டகால தலையீடுகள் தேவைப்படுகின்றன. வெவ்வேறு நாடுகளிலுள்ள பணியாளர்களும் தொழிற்சங்கங்களும் இந்த தேவைகளை பூர்த்தி செய்வதற்கான கோரிக்கைகளை விருத்தி செய்து வருகின்றனர்.

## II. ஆயத்த ஆடைத் தொழிற்சாலை பணியாளர்களின் நெருக்கடிக்கு பன்னாட்டு வர்த்தக நிறுவனங்களின் பொறுப்புணர்வு

அரசாங்கங்கள் மற்றும் விநியோக தொழிற்சாலைகளுக்கு அப்பாற்பட்டு, நவீன போக்குகளுக்கு ஆயத்த ஆடைகளை உற்பத்தி செய்வோர், வர்த்தக நிறுவனங்கள் மற்றும் மொத்த வியாபாரிகள் போன்ற உலகலாவிய தொழிற்துறையானது, நவநாகரிக ஆடைகளை உற்பத்தி செய்யும் ஆடைத் தொழிற்சாலை பணியாளர்களின் நலன்களை நிர்ணயிப்பதிலும் அதற்கு பங்களிப்பதிலும் மிக முக்கியமானதொரு பங்காற்றுகிறது. இந்த உற்பத்தி சங்கிலியில் 40 மில்லியனுக்கும் அதிகமான (60 சதவீதமானவர்கள் ஆசியாவிலுள்ளனர்) உற்பத்திப் பணியாளர்களால் தற்போது எதிர்கொள்ளப்படும் இந்த தீவிர நிர்கதி நிலையை நீக்குவதற்கு பன்னாட்டு நிறுவனங்கள் பங்களிக்க வேண்டியது கட்டாயமாகும்.

வர்த்தக நிறுவங்களின் விநியோக சங்கிலிகள் குறித்த அவற்றின் பொறுப்புணர்வானது, நீண்டகாலமாக நிலவி வரும் பிரச்சனையாக இருப்பதுடன், அது பல்வேறு பரிமாணங்களை உள்ளடக்கியதாகும். உலகளாவிய விநியோக சங்கிலியில் விநியோக உரிமையாளர்களாக இருப்பதுடன், விநியோகஸ்தகர்களின் இலாபத்தையும் பன்னாட்டு நிறுவனங்களே தீர்மானிக்கின்றன. பெரும்பாலும், பன்னாட்டு வர்த்தக நிறுவனங்கள் தங்களது உற்பத்தி நடைபெறும் தேசங்களில் எதிர்கொள்ளும் இடர்பாடுகளை, இடைத்தரகர்களின் மீது சுமத்தி தனது பொறுப்புணர்விலிறுந்து விலகிவிடுகின்றன. இருந்தபோதிலும் பன்னாட்டு நிறுவனங்கள் தங்களது விநியோக சங்கிலியில் உள்ள இடர்பாடுகளுக்கான பொறுப்பை ஏற்கவும், அர்ப்பணிப்புடன் செயல்பட வேண்டியதன் முக்கியத்துவத்தை அவற்றுக்கு வழியுறுத்தி சர்வதேச தொழிலாளர் அமைப்பு, உலகளாவிய தொழிற்துறை அமைப்பு, பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் மேம்பாட்டு அமைப்பு மற்றும் தொழிலாளர் உரிமை இயக்கம் போன்ற அமைப்புகள் குரல் கொடுத்து வருகின்றன.

பன்னாட்டு வர்த்தக நிறுவன விநியோக சங்கிலியில் ஏற்படும் இடர்பாடுகளுக்கான பொறுப்பை அவை எந்தெந்த வழிகளில் ஏற்க முடியும் என்பது தொடர்பான முக்கிய மாற்றங்களை வர்த்தக நிறுவனங்கள் உருவாக்குவது உள்ளிட்ட உலக அளவிலான விநியோக சங்கிலியில் முக்கிய மறுசீரமைப்புகளை ஏற்படுத்த வேண்டிய தேவையை தற்போதைய இடர் வெளிப்படுத்தியுள்ளது.

ஆயத்த ஆடை தொழிற்சாலை பணியாளர்கள் மீது கோவிட்-19 ஏற்படுத்தியுள்ள தாக்கத்தை போக்குவதற்கு குறிப்பிட்ட நிவாரண பங்களிப்புகளை முன்னிறுத்தி அவசரமானதும் மனிதாபிமானதுமான நெருக்கடிகளுக்கு பதிலுரைக்குமாறு பன்னாட்டு நிறுவனங்களுக்கு அழைப்பு விடுத்து, 2020ஆம் ஆண்டு மார்ச் மாதம் 23ம் தேதி ஆசியா புளோர் வேஜ் அலையன்ஸ் பிரகடனமொன்றை வெளியிட்டிருந்தது.

III. விநியோக சங்கிலியில் ஆயத்த ஆடை பணியாளர்களுக்கான உடனடி நிவாரணத்தை பன்னாட்டு வர்த்தக நிறுவனங்கள் தங்களது வருடாந்திர மொத்த வருமானத்தின் 2 சதவீதத்தை செலுத்துதல்

உடனடித் தீர்வாக, தனிமைப்படுத்தல் மற்றும் உற்பத்தி ரத்து உட்பட பல்வேறு காரணங்களுக்காக ஏற்பட்ட பணிகளின் வருமான இழப்பு தொடர்பாக அவசரமாக பதிலளிக்க வேண்டும் என ஆசியா புளோர் வேஜ் அலையன்ஸ் முன்மொழிந்திருந்தது. தற்போது உலக அளவிலான விநியோக சங்கிலியில் ஒப்பீட்டளவில் குறைந்த இடர்பாடுகளையே சந்திக்கும் பன்னாட்டு நிறுவனங்கள் அரசாங்கத்திற்கும், தங்களது விநியோகஸ்தகர்களது முயற்சிக்கும் ஆதரவு அளிக்க வேண்டியது கட்டாயமானது என்பதுடன், அவை கையெழுத்திட்டு ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

பெரும்பாலும் பெண் தொழிலாளர்களை கொண்ட இந்த விநியோக சங்கிலியில், பணியாளர்கள் மீது கோவிட்-19 இன் கொடூர தாக்கத்தின் ஒரு பகுதியையேனும் தடுக்க கூடிய "ஒரு முறை பன்னாட்டு நிறுவனங்களின் விநியோக சங்கிலி நிவாரண பங்களிப்பி" னூடாக (SRC) இந்த அவசர நெருக்கடிக்கு ஆயத்த ஆடை பன்னாட்டு நிறுவனங்கள் பதிலளிக்க வேண்டிய முறையை ஆசியா புளோர் வேஜ் அலையன்ஸ் முன்மொழிகிறது.

ஆசியா புளோர் வேஜ் அலையன்ஸின் இந்த ஒரு முறை பன்னாட்டு வர்த்தக பங்களிப்பின் அளவீடானது ஆசியாவிலுள்ள விநியோக தொழிற்சாலைகளின் இலாபத்தில் பன்னாட்டு வர்த்தக நிறுவனங்களின் அளவு மற்றும் பங்கீடு என்ற அடிப்படையை கொண்டதாகும்.

2020ஆம் ஆண்டு ஜீன் மாதத்தின்போது, பணியாளர்களின் சராசரி வருமான இழப்பானது அந்நாள் வரை 60 நாட்களுக்குரியதாகக் கணக்கிடப்பட்டதன் அடிப்படையில், பொறுப்பான வியாபார நடைமுறையின் தேவைக்கேற்ப, தமது விநியோக தொழிற்சாலைகளில் பணியாற்றும் ஒவ்வொரு பணியாளருக்கும் இந்த நிவாரண பங்களிப்பை வர்த்தக நிறுவனங்கள் மேற்கொள்ள வேண்டுமென நாம் கேட்டுக்கொள்கிறோம்.

ஊதிய இழப்பு தொடர்பாக கிடைக்கக்கூடிய தரவுகளின் அடிப்படையில், ஒவ்வொரு தொழிற்சாலையிலும் கடந்த 12 மாதங்களில் வர்த்தக நிறுவனங்களினால் ஈட்டப்பட்ட மொத்த வருமானத்தில் அதிகபட்சமாக 2 சதவீதமாக தமது விநியோக சங்கிலி பங்களிப்பை பன்னாட்டு வர்த்தக நிறுவனங்கள் வழங்க வேண்டிவரும் என நாம் முன்மொழிகிறோம். இந்த நிவாரண தொகையானது தங்களது விநியோக சங்கிலியில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு விநியோகஸ்தகர்கள் மூலமாக நேரடியாக செலுத்தவேண்டும் என கேட்டுக்கொள்கிறோம். பன்னாட்டு நிறுவனங்கள் இந்த பங்களிப்பை தங்களது விநியோகஸ்தகர்களுக்கு வழங்குமாயின், கோவிட்-19 நெருக்கடியின் பாதிப்புகளை குறைப்பதற்கு ஒவ்வொரு பணியாளருக்கும் உதவியுள்ளதாக இருக்கும்.

விநியோகஸ்தகர்களுக்கு வழங்கியுள்ள உற்பத்தி கோரிக்கைகள் தொடர்பான தமது கட்டுப்பாடுகளுக்கும் நீண்டகால உறுதிமொழிகளுக்கும் பன்னாட்டு நிறுவனங்கள் மதிப்பளிக்க வேண்டும் என்ற உலகளாவிய தொழிலாளர் மற்றும் மனித உரிமைகள் அமைப்புகள், தொழிற்சங்கங்கள் மற்றும் விநியோகஸ்தகர்களின் கோரிக்கைகளுக்கு ஆசியா புளோர் வேஜ் அலையன்ஸ் தனது ஆதரவையும் வலுப்படுத்தலையும் தெரிவித்துக்கொள்கிறது. இது விநியோகஸ்தகர்களுக்கு வழங்கப்படும் நிவாரண பங்களிப்பு என்பதுடன், உற்பத்தி செய்யப்பட்டவற்றுக்கும் ஏற்கனவே வழங்கப்பட்ட உற்பத்தி ஆர்டர்களுக்கும் தொகையை வழங்குதல், உற்பத்தி ஆர்டர்களை ரத்து செய்யாமை, ஏற்கனவே வழங்கப்பட்ட ஆர்டர்களுக்கும் அதற்கு உண்டான தொகையை செலுத்துதல், ஏற்கனவே குறைவாக விலை மதிப்பிடப்பட்ட ஆர்டர்களுக்கு விலைக்கழிவு கோராமை போன்ற நடைமுறையிலுள்ளதும் தற்போதுள்ளதுமான பன்னாட்டு வர்த்தக நிறுவனங்களின் விநியோக சங்கிலி கட்டுப்பாடுகளுக்கு இது பதிலீடாக அமையாது. ஆட்குறைப்பு, பணியாளர்களைத் திருப்பி அனுப்புதல் மற்றும் தொழிற்சாலைகளை மூடுதல் போன்ற சந்தர்ப்பங்களில் வழங்கும் சமூக பணிக்கொடை பங்களிப்புக்குரிய கட்டுப்பாடுகளையும் இது பதிலீடு செய்யாது.

## IV. பன்னாட்டு வர்த்தக நிறுவனங்களின் பங்களிப்பு பணியாளர்களை சென்றடைகிறதா என்பதை உறுதிபடுத்துதல்

வியாபார நிறுவனங்களிலும் அங்கு பணிபுரியும் தொழிலாளர்களது நலன்களுக்கு பயன் தரக்கூடிய கொள்கைகளையும், சட்ட நடவடிக்கைகளையும் பல அரசுகள் செய்து வருகின்றன. நெருக்கடிகால ஆதரவு மூலங்கள் என்ற அடுப்படையில் சர்வதேச நிதி நிறுவனங்களின் கதவுகளும் தட்டப்பட்டு வருகிறன. எதிர்வரும் மாதங்களில் அரசாங்கங்களும் விநியோகஸ்தகர்களும் தமது பொறுப்புணர்வை உணர்ந்து நடக்கின்றனவா என்பதை உறுதிபடுத்துவதற்காக ஆசியா புளோர் வேஜ் அலையன்ஸ் ஆசியாவிலுள்ள ஆயத்த ஆடை உற்பத்தி செய்யும் நாடுகளில் இவற்றை ஆராய்ந்தும் கண்காணித்தும் வருகிறது.

இந்தத் தலையீடுகள் எதுவாயினும், இங்கே வரையறுக்கப்பட்டதற்கேற்ப விநியோக சங்கிலி நிவாரண பங்களிப்பை வழங்குமாறு வர்த்தக நிறுவனங்களுக்கு நாம் வலியுறுத்துகிறோம். இதன் மூலமாக பல நாடுகளிலுள்ள பற்றாகுறைகளைத் தீர்ப்பதும் அவசியமனதாகும்.

நவநாகரிக பன்னாட்டு வர்த்தக நிறுவனங்களினால் ஏற்படுத்தப்பட்ட உலகளாவிய விநியோக சங்கிலியின் அசமத்துவம் மற்றும் இடர்பாடுகள் ஏற்பட்டுள்ள இந்த நெருக்கடி நிலையில், ஒவ்வொரு பன்னாட்டு வர்த்தக நிறுவனங்களும் பின்வருவனவற்றை மேற்கொள்ள வேண்டும் என ஆசியா புளோர் வேஜ் அலையன்ஸ் முன்மொழிகிறது:

- உற்பத்தி நாடுகளிலுள்ள தமது ஒவ்வொரு விநியோக தொழிற்சாலையிலும் கடந்த 12 மாதங்களில் கிடைத்த மொத்த வருமானத்தில் 2 சதவீதத்தைத் தமது விநியோக சங்கிலி நிவாரண பங்களிப்பாக உடனடியாக அறிவிக்க வேண்டும்.
- இந்த நிவாரண பங்களிப்பை பெறுவதற்கு தகுதி வாய்ந்த அனைத்து பணியாளர்களையும் சென்றடைவதை கருத்தில் கொண்டு விநியோகஸ்தர்களுடன் இணைந்து பணியாற்றுவதற்கு அந்தந்த நாடுகளிலுள்ள ஆசியா புளோர் வேஜ் அலையன்ஸ், அதன் உறுப்பு தொழிற்சங்கங்கள் மற்றும் கூட்டமைப்புகளுடன் இணைதல்.

## பின்வரும் தொழிற்சங்கங்களால் ஒப்புதல் அளிக்கபட்டது:

Cambodian Alliance of Trade Unions (CATU)

Coalition of Cambodian Apparel Workers' Democratic Union (CCAWDU)

Garment Labour Union (GLU), India

Karnataka Garment Workers Union (KOOGU), India

Garment and Allied Workers Union (GAWU), India

Hosiery Workers Unity Centre (HWUC), India

Mill Mazdoor Panchayat (MMP), India

Tamil Nadu Textile and Common Labour Union (TTCU), India

Serikat Pekerja Nasional (SPN), Indonesia

Federasi Serikat Buruh Garmen, Kerajinan, Teksil, Kulit dan Sentra Industri (FSB Garteks), Indonesia

Gabungan Serikat Buruh Indonesia(GSBI)

Federasi Serikat Buruh Indonesia (FSBI)

Serikat Buruh Sejahtera Indonesia (SBSI 92)

National Trade Union Federation (NTUF), Pakistan

The Ceylon Mercantile, Industrial and General Workers' Union (CMU), Sri Lanka

Textile, Garment and Clothing Workers Union (TGCWU), Sri Lanka

Dabindu Collective Union, Sri Lanka

National Union of Seafarers of Sri Lanka (NUSS)

United Labour Federation (ULF), Sri Lanka